# மாங்காடு நகராட்சி
# நகர்மன்ற சாதாரணக்கூட்டம்

2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22.08.2024ம் வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு மாங்காடு நகராட்சி நகரமன்ற கூட்ட அரங்கில் நடைபெற உள்ள நகர்மன்ற சாதாரணக் கூட்டப்பொருள் நடவடிக்கை விவரம்.

**குறள்:** உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

**விளக்கம்:** உடைநெகிழ்ந்தவனுடைய கை, உடனே உதவிக்காப்பது போல் (நண்பனுக்குத் துன்பம் வந்தால்) அப்போதே சென்று துன்பத்தைக் களைவது நட்பு.

**பொருள் எண்.1**

நகராட்சி ஆணையரின் ஜுன் 2024 மற்றும் ஜுலை 2024 மாதங்களுக்கான நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.2**

நகராட்சியில் பல்வேறு இனங்களுக்கான ஜுன் 2024 மற்றும் ஜுலை 2024 மாதங்களுக்கான வரவு மற்றும் செலவுகள் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.3**

நகராட்சி அலுவலகத்திற்கு வரப்பெற்றுள்ள முக்கிய அரசு கடிதங்கள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்: 4**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.31917/2019/TP2, நாள்.25.07.2024 கடிதத்தில் கட்டட வரைபட அனுமதி சுயசான்று (Self-Certification) முறையில் குடியிருப்புகளுக்கு கட்டட வரைபட அனுமதி வழங்க ஒற்றைச்சாளர இணைய முகப்பில் (Single Window Portal) மென்பொருள் தொகுதியை உருவாக்கியும் மற்றும் அதனை செயல்படுத்தியும் உள்ளது. அதன்படி அதற்கான ஒருங்கிணைந்த கட்டணம் நிர்ணயம் செய்து அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி அரசாணை (நிலை) எண்.94, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள்.18.07.2024-ல் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, சட்டப்பிரிவு 198, உட்பிரிவு (2) (xviii)-ல் அரசுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில், இணைப்பு I, II மற்றும் III-ல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிலைகளில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் 2500 சதுர அடி வரை பரப்பளவுள்ள மனையில் 3500 சதுர அடி வரையிலான குடியிருப்பு கட்டுமானத்திற்கு (தரைத்தளம் (அ) தரைத்தளத்துடன் கூடிய முதல் தளம்) சுய சான்றின் (Self-Certification) அடிப்படையில் ஒற்றைச்சாளர முறையில் (Single Window Portal) இணைய வழி

கட்டட அனுமதி (Online Building Approval) பெறுவதற்கு செலுத்த வேண்டிய ஒருங்கிணைந்த கட்டணங்களைக் கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்து அரசு ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| நகராட்சிகள் – குடியிருப்புக் கட்டுமானம் – கட்டண விவரம் | | | |
|---|---|---|---|
| 325 ச.மீ வரை (3500 ச,அடி வரை) | | | ஒருங்கிணைந்த கட்டணம் |
| வ.எண் | நகராட்சியின் நிலை | ரூ/ ச.மீ | ரூ/ச.அடி |
| 1. | இரண்டாம் நிலை நகராட்சிகள் | 750 | 70 |

| DETAILS OF MUNICIPALITIES | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Second Municipalitiy | | Consolidated Fee | | | | |
| Sl.No | Name of the Municipality | Rs.Per Sq.mt | | | | Rs.Per sq.ft |
| | | Building License Fee | D.C | LWF | Total | |
| 1. | Mangadu | 519 | 10 | 221 | 750 | 70 |

மேற்காணும் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்கள் சுய சான்று மூலம் கட்டட உரிமம் பெறும் திட்டத்திற்கு மட்டுமே பொருந்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மேற்கண்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி அரசாணை (நிலை) எண்.133, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [UD4(1)] துறை, நாள்.18.07.2024-ல் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதகள் 2019-ன் விதி எண்.2,6 மற்றும் தொடர்புடைய ,இணைப்புகள் ஆகியற்றில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஆணையின் படி,

1. விதி எண்-2 துணை விதி

   "105-A" –ல் "சுய சான்றளிப்பு" என்பது சுய சான்றளிப்பு அல்லது சுய சான்றளிக்கப்பட்ட கட்டிடங்களின் கட்டுமானம் அல்லது புனரமைப்புக்கான கட்டிடத் திட்டம் மற்றும் தளத்திட்டம் ஆகியவை நடைமுறையில் உள்ள சட்டம் அல்லது அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளுக்கு உட்பட்டு, விண்ணப்பதாரால் வழங்கப்பட்ட சுய சான்றளிப்பு அல்லது அறிவிப்பு ஆகும் என வரையறுக்கப்பட்டுள்ளது:

   "105-B" –ல் "சுய சான்று அடிப்படையிலான கட்டடங்கள்" என்பதற்கு 2500 சதுர அடி பரப்பளவு கொண்ட மனையில் 3500 சதுர அடி பரப்பளவு கொண்ட 2 குடியிருப்புகளுக்கு (2 Dwelling Units) மிகாமல், தரைத்தளம் அல்லது தரைத்தளம் மற்றும் முதல் தளம் கொண்ட 7 மீட்டர் உயரத்திற்கு உட்பட்ட கட்டுமானம் என வரையறுக்கப்பட்டுள்ளது.

2. விதி எண்.6-ல் துணை விதி 1-A-க்கு பிறகு பின்வரும் துணை விதி உட்புகுத்தப்பட்டுள்ளது. அதாவது:-

   (1-A) விதி 35-ன் உள்ளடக்கம் யாதாகினும், சுய சான்றளிக்கப்பட்ட கட்டடத்திற்கான திட்ட அனுமதி மற்றும் கட்டட அனுமதி பெறுவதற்கான நோக்கத்திற்காக, விண்ணப்பதாரர்

நிலத்தின் உரிமையாளராக அல்லது குத்தகைதாரர் அல்லது உரிமையாளரின் அதிகாரம் பெற்றவர், அபிவிருத்தி செய்ய வேண்டிய நிலம், சுய சான்றளிப்பு தொகுதி மற்றும் ஆன்லைன் வழியாக இணைப்பு XXVI-க்கு உட்பட்டு விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

3. இணைப்பு XXV-க்குப் பிறகு இணைப்பு XXVI சேர்க்கப்பட்டுள்ளது. இவ்விணைப்பில் விதி எண் 6(1-A)-ன் படி சுய சான்றளிப்பு கட்டடங்களுக்கான விதிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன.

அரசாணை (நிலை) எண்.134, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [UD4)1)] துறை, நாள்.18.07.2024-ல் சுய சான்றளிப்பு கட்டடங்களுக்கு உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி பொருந்தாது என ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி அரசாணையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணங்கள் சுயசான்று மூலம் கட்டட உரிமம் பெறும் திட்டத்திற்கு மட்டுமே பொருந்தும் என்பதால் இவ்வரசாணையில் கட்டுப்படாத இதர கட்டுமானங்களுக்கு ஏற்கெனவே அந்தந்த நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களால் நிர்ணயிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கட்டணங்களை அரசாணையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணங்களை அரசாணையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணங்களுக்கு இணையாக உள்ளனவா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்கண்டவாறு குடியிருப்பு மற்றும் வணிக கட்டங்களுக்கு கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| I | **கட்டிட உரிமத் தொகை** | | |
| 1 | **உத்தேச கட்டிடத்தின் விவரம்** | **குடியிருப்பு கட்டண விவரம்** | **வணிக பயன்பாடு கட்டண விவரம்** |
| | **கட்டிடத்தின் மொத்த பரப்பளவு**<br>**i) குடியிருப்பு கட்டிடம்**<br>ரூ.750/- 1 ச.மீட்டருக்கு (அ) ரூ.70/- 1 ச.அடிக்கு<br>**ii) வணிக கட்டிடம்**<br>ரூ.850/- 1 ச.மீட்டருக்கு (அ) ரூ.79/- 1 ச.அடிக்கு | a) கட்டிட உரிமை கட்டணம் ரூ.519/- 1(ச.மீட்டருக்கு) | a) கட்டிட உரிமை கட்டணம் ரூ.561/- (1 ச.மீட்டருக்கு) |
| | | b) வளர்ச்சி கட்டணம் D.C ரூ.10/-(1 ச.மீட்டருக்கு) | b) வளர்ச்சி கட்டணம் D.C ரூ.28/- (1 ச.மீட்டருக்கு) |
| | | c) கட்டிட தொழிலாளர் நல சந்தா கட்டணம் (LWF) ரூ.221/- (1 ச.மீட்டருக்கு) | c) கட்டிட தொழிலாளர் நல சந்தா கட்டணம் (LWF) ரூ.221/- (1 ச.மீட்டருக்கு) |
| 2 | கட்டிட பணிகள் துவங்கப்பட்டிருப்பின் அபராத கட்டணம் | கட்டிட உரிமை கட்டணத்தில் 50% | கட்டிட உரிமை கட்டணத்தில் 50% |
| 3 | பழைய கட்டிடம் இடித்து அப்புறப்படுத்த இடிமான கட்டணம் | 1 ச.மீட்டருக்கு ரூ.100/- | 1 ச.மீட்டருக்கு ரூ.100/- |
| II | மழைநீர் சேகரிப்பு தொட்டி முன்வைப்பு தொகை | 1 குடியிருப்புக்கு ரூ.1000/- | 1 கட்டிடத்திற்கு ரூ.10000/- |
| III | ஆய்வு கட்டணம் | ரூ.2000/- | ரூ.2000/- |

| | | | |
|---|---|---|---|
| IV | முறைப்படுத்துதல் கட்டணம் (R.C) | சதுர மீட்டருக்கு ரூ.50/- | சதுர மீட்டருக்கு ரூ.50/- |
| V | திறந்தவெளி கட்டணம் (O.S.R) | 10% of Guideline Value | 10% of Guideline Value |
| VI | உட்கட்டமைப்பு கட்டணம் (I & A Charges) | சதுர மீட்டருக்கு ரூ.375/- | சதுர மீட்டருக்கு ரூ.375/- |
| VII | Security Deposit | 50% of I & A Charges | 50% of I & A Charges |
| VIII | கொடி நாள் கட்டணம் | ரூ.1000/- | ரூ.5000/- |
| IX | அறிவிப்பு பலகை | ரூ.1500/- | ரூ.1500/- |

மேற்கண்ட அரசாணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள சுயசான்று (**Self-Certification**) முறையில் குடியிருப்பு கட்டடங்களுக்கு உரிம கட்டணங்கள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் ஆகியன நகர்மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் கோரப்பட்டுள்ள படி சுயசான்றின் அடிப்படையில் பொருந்தாத அளவிற்கு அதிகமாகவும் அதிக பரப்பளவுள்ள குடியிருப்பு மற்றும் வணிக கட்டடங்களுக்கு கட்டிட உரிமத் தொகை நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.5**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட **மாங்காடு 'ஆ' கிராம** புல எண்.**304/2A,2B,2C & 304/2D**-ல் உள்ள **3550 ச.மீ.** இடத்தின் உரிமையாளர், **M/s.Kasmo Enterprises Pvt Ltd, Rep by Mr.Naresh Kumar & Others** அவர்களின் விண்ணப்பத்தின் பேரில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழு கடிதம் எண்.**Layout-1/0079/2024, நாள்.19.06.2024**–ன்படி மேற்படி மனைப்பிரிவில் **31** மனைகள் கொண்ட மனைக்கு திட்ட அனுமதி எண்.**15853**, PPD/LO No.136/2024-ன்படி சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இம்மனைபிரிவில் **941ச.மீ** சாலைகள் மற்றும் **(PP-1) 15 ச.மீ** பொது உபயோகத்திற்காகவும் **(PP-2) 18ச.மீ** மின்சார வாரியத்திற்காகவும் இரண்டு திறந்தவெளிகள் தானப்பத்திர பதிவு எண் முறையே **10462/2023** , நாள்.**20.06.2024**–ன்படி ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

மேலும் மேற்காணும் மனைப்பிரிவுக்கு சாலை, மழைநீர் வடிகால், தெருவிளக்கு, குடிநீர் ஆகிய அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவதற்காக நகராட்சி பொறியியல்பிரிவு மூலம் மதிப்பீடுகள் தயாரித்து மனை உரிமையாளருக்கு இதே கோப்பு எண்ணிட்ட நாள்.**09.08.2024**ம் தேதிய கடிதத்தின்படி கேட்பு அறிவிப்பு அனுப்பப்பட்டு மனைப்பிரிவு அபிரிவிருத்தியாளரால் சாலை, மழைநீர் வடிகால், தெருவிளக்கு, குடிநீர் மற்றும் வேலி அமைத்தல் ஆகிய அடிப்படை வசதிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது என உரிமையாளரிடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. மேலும், நகரமைப்பு பிரிவு மனைப்பிரிவு கட்டணம் செலுத்திய பின்னர் மேற்படி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளிக்க வேண்டி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்ட மேற்படி மனைப்பிரிவிற்கான அடிப்படை வசதிகள் இடத்தின் உரிமையாளர் மூலம் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. பொது ஒதுக்கீடுகளுக்கான தானப்பத்திரங்கள் பெறப்பட்டு உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.6**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட **மாங்காடு 'ஆ' கிராம** புல எண்.**475/1A2, 477/2, 482/6B & 7A4B**-ல் **9838** ச.மீ பரப்பளவில் அமைந்துள்ள இடத்தினை மனைபிரிவு செய்ததினை தொடர்ந்து, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும ந.க.எண்.**L1/0058/2024 நாள்:09.07.2024**–ல் மேற்கண்ட மனைபிரிவில் அமைந்த சாலைகள் மற்றும் பொது இடத்தினை தானபத்திரம் மூலம் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு ஒப்படைப்பு செய்ய **M/s.Stepstone Promoters Pvt Ltd rep by K.Mothish Kumar & Others** தெரிவித்ததுள்ளதின் பேரில், மேற்கண்ட மனுதாரர் கடந்த **27.06.2024**–ம் தேதியன்று குன்றத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் தானபத்திர எண்.**10777/2024** மற்றும் **10781/2024** மொத்த தாள்கள் **1** முதல் **25** வரை மற்றும் தாள்கள் **1** முதல் **18** வரை உள்ளவற்றை பதிவு செய்து சமர்பித்து உள்ளார். அதனை தொடர்ந்து சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் மேற்கண்ட மனைப்பிரிவு PPD/LO No.146/2024-ன்படி நாள்:07.07.2024 என எண்ணிடப்பட்டு, திட்ட அனுமதி எண்.**15863** என வழங்கப்பட்டுள்ளது. பொறியியல் பிரிவின்குறிப்பிட்டுள்ள மனைப்பிரிவில் உள்ள தார் சாலைகள் தெரு விளக்குகள் போடப்பட்டுள்ளது என பொறியாளர் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மதிப்பீட்டு தொகை நிர்ணயிக்கப்பட்ட மழைநீர் கால்வாய் ரூ.**35.20**, குடிநீர் வைப்பு தொகை ரூ.**4.30**, மற்றும் PP1 & PP2 வேலி அமைத்தல் ரூ.**1.60** மொத்தம் **41.10** இலட்சம் தொகை செலுத்த கேட்பு அறிவிப்பு வழங்கப்பட்டது. மேற்படி அறிவிப்பு வழங்கப்பட்டதை தொடர்ந்து நகராட்சி கருவுலத்தில் உரிய தொகை செலுத்தப்பட்டுள்ளது. (ரசீது எண்.**180/001/01/24–25/0003446**, நாள்.**20.08.2024**), மேலும், நகரமைப்பு பிரிவின் மனைப்பிரிவு கட்டணம் செலுத்திய பின்னர் மனைப்பிரிவு அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்ட மேற்படி மனைப்பிரிவிற்கான அடிப்படை வசதிகள் இடத்தின் உரிமையாளர் மூலம் தொகை செலுத்தப்பட்டுள்ளது. பொது ஒதுக்கீடுகளுக்கான தானப்பத்திரங்கள் பெறப்பட்டு உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.7**

**மாங்காடு நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை பணிகளுக்காக M/s. Blooming Recycles நிறுவனம் மூலம் 52 DBC பணியாளர்கள் வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது., பொது மக்களின் சுகாதார நலன் கருதியும் அவசர அவசியம் கருதியும் மேற்கண்ட நிறுவனத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் அதே விலை விகிதத்தில் 01.07.2024 முதல் 31.08.2024 வரை இரண்டு மாத காலத்ததிற்கு பணி நீட்டிப்பு வழங்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணிமேற்கொண்டமைக்கு பின்னேற்பு நகர்மன்றத்திற்கு மன்றப் பொருள் வைக்கப்படுகிறது.**

அலுவலக குறிப்பு **:–** மன்றம் அனுமதி வழங்கலாம்

## பொருள் எண்.8

மாங்காடு நகராட்சி 27 வார்டுகளை கொண்ட ஒரு இரண்டாம் நிலை நகராட்சியாகும். இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருக்களில் சுற்றித்திரியும் நாய்கள் மற்றும் வீடுகளில் வளர்க்கப்படும் நாய்கள் ஆகியன நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே வருகிறது. இதனால் சாலையில் செல்லும் வாகன ஓட்டிகள் மிகவும் அச்சத்துடன் செல்கின்றனர். மேலும் பொது மக்கள் தெருக்களில் செல்லும் போதும் மிகுந்த அச்சத்துடன் சென்றுவருகின்றனர். மேலும் பொதுமக்களை வெறிபிடித்த நாய்கள் அவ்வப்போது கடித்துவிடுவதாகவும் தகுந்த நடவடிக்கை எடுத்திட வேண்டியும் நகர் மன்ற உறுப்பினர் மற்றும் பொதுமக்களிடம் இருந்தும் தொடர்ந்து புகார்கள் இவ்வலுவலகத்திற்கு வந்த வண்ணம் உள்ளது. எனவே தெருக்களில் சுற்றித்திரியும் நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை (ANIMAL BIRTH CONTROL) செய்து நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தவும், வெறிநாய் கடி தடுப்பூசி ( ANTI RABIES VACCINE ) செலுத்திடும் பணி மேற்கொள்வதும் அவசியமாகிறது. . நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்:20383/2022/எச்1/ நாள்:07/09/2023 மற்றும் கால்நடை வளர்ப்பு பால், மீன்வளம் மற்றும் மீனவர் (AH3) துறை (4D) எண்:1/நாள்:17/03/2023 ஆகியவற்றில் தெரிவித்துள்ளபடி மேற்கண்ட பணியை செய்திட ஒரு நாய் ஒன்றிற்க்கு ரூ.1650/- செலவினம் செய்திட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே இந்நகராட்சியில் தோராயமாக 550 நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநாய் தடுப்பூசி செலுத்திடும் பணிகளை தகுதிபெற்ற நிறுவனம் அல்லது தகுதிபெற்ற அமைப்புகள் வாயிலாக மேற்கண்ட பணிகள் செய்திடவும் அதற்கான தோராய செலவினம் ரூ.9.50 இலட்சம் செலவுகள் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் எண்.9

மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கி வரும் அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் வளாகங்கள் சுத்தம் செய்யும் பணி மற்றும் அப்பள்ளிகளில் உள்ள கழிவறைகள் சுத்தம் செய்து பராமரித்திடும் பணிகளை அந்தந்த நகராட்சிகள் மேற்கொள்ள வேண்டும் என அரசாணை எண் 166. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.IV) துறை நாள் 23/11/2016 -ன் வாயிலாக ஆணையிடப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் சுத்தம் செய்யும் பணிக்கு துப்புரவு பணியாளர்கள் நியமிக்க வேண்டியுள்ளது. ஆனால் இந்நகராட்சியில் துப்புரவு பணிகளை மேற்கொள்ள குறைவான துப்புரவு பணியாளர்களே உள்ளனர்.

எனவே மேற்படி பள்ளிகளில் துப்புரவு பணிகள் மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை நியமிக்க வேண்டியுள்ளது. எனவே, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 7 அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் கழிப்பறைகள் சுத்தம் செய்தல் மற்றும் பள்ளி வளாகங்கள் சுத்தம் செய்து பராமரித்தல் பணிகள் செய்திட ஒரு நகராட்சி பள்ளிக்கு ஒரு துப்புரவு பணியாளர் வீதம் 7 துப்புரவு பணியாளர்களும் ஒரு துப்புரவு மேற்பார்வையாளர் உட்பட மொத்தம் 8 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் ஓராண்டு காலத்திற்கு நியமித்திடவும் அதற்கான தோராய செலவினம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தேவையான பொருட்கள் வாங்கும் செலவினம் ஆகியன சேர்த்து ரூ.16.43 இலட்சம் செலவினம் மேற்கொள்ள மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

### பொருள் எண்.10

மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகளில் வளர்க்கப்படும் மாடுகளை முறையாக பராமரிக்காமல் தெருக்களில் திரியவிடுகின்றனர். இதனால் பொதுமக்களுக்கும் வாகன ஓட்டிகளுக்கும் இடையூராக உள்ளது . மேலும் நகரின் முக்கிய சாலைகள் , தெருக்களில் சுற்றித்திரியும் மாடுகளால் அடிக்கடி வாகன விபத்துகள் ஏற்பட்ட வண்ணம் உள்ளது. மேலும் தெருக்களில் பராமரிப்பின்றி சுற்றித்திரியும் மாடுகளை பிடித்து அப்புறப்படுத்திட மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆய்வு கூட்டத்திலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இது தொடர்பாக தகுந்த நடவடிக்கை எடுத்திட கோரி நகர் மன்ற உறுப்பினர்கள், பொதுமக்களிடம் இருந்து தொடர்ந்து புகார்கள் தெரிவித்து வருகின்றனர். எனவே நகரின் தெருக்களில் பராமரிப்பின்றி சுற்றித்திரியும் மாடுகளை தகுதிபெற்ற அமைப்புகள் வாயிலாக பிடித்து கோசாலைகளுக்கு அனுப்பி வைத்திடும் பணியினை செய்திடவும் அதற்கான தோராய செலவின தொகை ரூ.3.00 இலட்சம் பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் நகர்மன்ற அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

### பொருள் எண்.11

மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது சுகாதாரப் பிரிவின வாயிலாக திடக்கழிவு மேலாண்மை பணிகள், பிளாஸ்டிக் ஒழிப்பு பணிகள் மற்றும் டெங்கு காய்ச்சல் மற்றும் இதர காய்ச்சல் பரவாமல் தடுக்கும் பணிகள் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்கண்ட பணிகள் தொடர்பாக பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திட விழிப்புணர்வு Stickers, Handbills ஆகியன தேவைப்படுவதால் அவற்றை கொள்முதல் செய்திடவும் அதற்கான தோராய செலவினம் ரூ.5.00 இலட்சம் தொகையை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

### பொருள் எண்.12

மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது சுகாதாரப்பிரிவின் வாயிலாக திடக்கழிவு மேலாண்மை பணிகள், பிளாஸ்டிக் ஒழிப்பு பணிகள் மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணிகள் தொடர்பாக பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக நாடக குழுக்கள் வாயிலாக விழிப்புணர்வு நாடகங்கள் நடத்திடவும் அதற்கான தோராய செலவினம் ரூ.50,000/- தொகையை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

### பொருள் எண்.13

மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது சுகாதாரப் பிரிவின் வாயிலாக தினசரி சேகரமாகும் குப்பைகளை தனியார்மயம் வாயிலாக சேகரிக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு சேகரிக்கப்படும் குப்பைகளில் தரம்பிரித்து வாங்கப்பட்டு உரம் தயாரித்தல் மற்றும் மறு சுழற்சி செய்யப்படும் பொருட்கள் விற்பனை செய்தல் ஆகியன நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தரம் பிரிக்க இயலாத குப்பைகளை இராமகிருஷ்ணாபுரம் பகுதியில் உள்ள சுடுகாடு அருகில் கொட்டப்பட்டுள்ளது. மேற்படி குப்பைகள் பேரூராட்சியாக இருந்த நாளில் இருந்து இருக்கும் பழைய குப்பையாகும். குப்பைகள் தேக்கமடைந்து இருப்பதால் அருகில் உள்ளவர்களுக்கு துர்நாற்றம் மற்றும் தொற்று நோய் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. மேலும் இறந்த உடலை அடக்கம் செய்திட வருபவர்களுக்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே மேற்படி சுடுகாடு பகுதியில் தேக்கமடைந்துள்ள

பழைய குப்பைகளை அகற்றிட ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து 06.03.2024 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டுள்ளது. மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கியமைக்கு மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விலைப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | M S R EARTH MOVERS | -0.83% குறைவு |
| 2 | S R V EARTH MOVERS | 1.24% அதிகம் |

அலுவலக குறிப்பு:- அ) ஒப்பந்தபுள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்

## பொருள் எண்.14

மாங்காடு நகராட்சியில் டெங்கு காய்ச்சல் மற்றும் பிற வைரஸ் நோய்கள் பராமல் தடுப்பதற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொதுசுகாதார பணிக்கு தேவையான சுண்ணாம்பு, பிளிச்சிங் பவுடர் மற்றும் பினாயில் ஆகிய பொது சுகாதார பொருட்கள் அவசியம் என்பதால் மேற்படி பணிகள் மேற்கொள்ள 24.07.2024 ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்பு நோக்கு பட்டியல் ஒப்புதல் வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விலைப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திருவாளர் எம்.எம்.எம்.எண்டர்பிரைசஸ் | 1.2% குறைவு |
| 2 | வடக்கன் குளம் மல்டி பர்பஸ் கே.ஆப். சொசைட்டி லிமிடெட் | 2.3% அதிகம் |

அலுவலக குறிப்பு :– அ) ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் எண்.15

மாங்காடு நகராட்சியில் பொதுசுகாதார பணிக்கு தேவையான கூடை மலார் மற்றும் பொது சுகாதார பொருட்கள் அவசியம் என்பதால் மேற்படி பணிகள் மேற்கொள்ள 24.07.2024 ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்பு நோக்கு பட்டியல் ஒப்புதல் வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விலைப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திருவாளர் எம்.எம்.எம்.எண்டர்பிரைசஸ் | 0.8% குறைவு |
| 2 | வடக்கன் குளம் மல்டி பர்பஸ் கே.ஆப். சொசைட்டி லிமிடெட் | 2.6% அதிகம் |

அலுவலக குறிப்பு :– அ) ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண்.16

மாங்காடு நகராட்சி பொது சுகாதார பிரிவின் வாயிலாக நகராட்சி எல்லைக்குட்பட்ட வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் தினந்தோறும் உருவாகும் குப்பைகளை தூய்மை பணியாளர்கள் வாயிலாக தரம் பிரித்து வாங்கப்பட்டு இராமகிருஷ்ணாபுரம் பகுதியில் உள்ள MCC மையத்தில் உரம் தயாரிக்கும் பணிகள், பிளாஸ்டிக் அரைக்கும் பணிகள் மற்றும் மறுசுழற்சி செய்ய இயலாத பிளாஸ்டிக் பொருட்களை இயந்திரம் கொண்டு கட்டி பிற பயன்பாட்டிற்கு அனுப்பும் பணிகள் ஆகியன மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணிகளுக்கு பயன்படுத்தப்படும் இயந்திரங்களை மக்கும் குப்பைகளை அரைக்கும் இயந்திரம், பிளாஸ்டிக் அரைக்கும் இயந்திரம், பிளாஸ்டிக் பெய்லிங் இயந்திரம் ஆகியன பயன்படுத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்கும் பணிக்கு கொசு புகை ஒழிப்பு இயந்திரம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்காணும் இயந்திரங்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்யும் பணிக்கு 31.07.2024 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி கோரப்பட்ட விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விலைப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திருவாளர். சி.ஆர்.எஸ்.டி. எண்டர்பிரைசஸ் | –1.23% குறைவு |
| 2 | திருவாளர். சாய்ராம் எண்டர் பிரைசஸ் | 1.19% அதிகம் |
| 3 | திருவாளர். சரஸ்வதி எண்டர் பிரைசஸ் | 4.26% அதிகம் |

அலுவலக குறிப்பு :– அ) ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண்.17

மாங்காடு நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் 2024–25 ஆம் ஆண்டிற்கு தூய்மை இந்தியா திட்டம் (SBM 2.0) செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக பொது மக்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி (IEC) நடத்தப்பட்டு வருகிறது. விழிப்புணர்வு நிகழ்ச்சி (IEC) தேவையான Hand Bills, Banner,Flex ஆகிய பொருட்கள் சப்ளை செய்யும் பணிக்கு 26.07.2024 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விலைப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | பூபால் டிஜிட்டல் | 2.1% குறைவு |
| 2 | அப்பு ஆர்ட்ஸ் | 4.16% அதிகம் |
| 3 | தேவா ஆர்ட்ஸ் | 7.5% அதிகம் |

அலுவலக குறிப்பு :– அ) ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண்.18

மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட 27 வார்டுகளில் பொது சுகாதாரப் பிரிவின் வாயிலாக சுகாதார பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகரின் பல பகுதிகளில் மழை காலங்களில் தண்ணீர் தேங்கி நிற்பதை சரி செய்திடவும் மழைநீர் கால்வாய்களை சுத்தம் செய்திடவும் செடி கொடிகள் மற்றும் புதர்களை அகற்றி சுத்தம் செய்திடவும் JCB இயந்திரம் கொண்டு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. நகராட்சிக்கு சொந்தமான JCB இயந்திரம் ஏதும் இல்லை. எனவே, நகரின் பல பகுதிகளில் அவ்வப்போது JCB இயந்திரம் கொண்டு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் வாடகை அடிப்படையில் JCB இயந்திரம் பணிக்கு எடுக்க வேண்டியுள்ளது. மேற்கண்ட பணியினை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள 24.07.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விலைப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திருவாளர். எம்.எஸ். ஆர். எர்த் மூவர்ஸ் | 2.94% குறைவு |
| 2 | திருவாளர். எஸ்.ஆர்.வி. எர்த் மூவர்ஸ் | 5.88% அதிகம் |

அலுவலக குறிப்பு :— அ) ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்: 19**

**மாங்காடு நகராட்சியில் பின்வரும் பணிகளை 2024-2025ஆம் ஆண்டு பொது நிதியில் மேற்கொள்ள மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2024-25ம் ஆண்டின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.**

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1 | அலமேலு அம்பாள் தெரு பேவர் பிளாக் சாலை உயர்த்தி அமைத்தல் | 11.50 |
| 2 | வார்டு எண்.18 சீனிவாசா நகர் 1,2 குறுக்குத் தெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 3.50 |
| 3 | சபரி நகர் 1,2,3 தெருக்கள் தார்சாலை அமைத்தல் | 17.20 |
| 4 | சபரி நகர் மெயின் ரோடு, மங்களபுரம் தார்சாலை அமைத்தல் | 17.70 |
| 5 | வார்டு எண்.6 நரிவனசாலை (பழங்குடியினர் குடியிருப்பு) பகுதியில் ஆழ்ளை கிணறு அமைத்து குடிநீர் தொட்டி கட்டுதல் | 2.40 |
| 6 | வார்டு எண்.9 பள்ளிக்கூடத் தெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 3.00 |

**அலுவலகக்குறிப்பு:** மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2024-25ம் ஆண்டு பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண்: 20</u>**

மாங்காடு நகராட்சி பகுதியில் உள்ள வார்டு எண்.7,15 மற்றும் 18 ஆகிய பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களின் கோரிக்கைக்கு இணங்க நகர்மன்ற தலைவர் மற்றும் துணைத்தலைவர் அவர்களின் அறிவுரையின்படி குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு ஓராண்டு காலமாக மக்கள் பயன்பாட்டில் உள்ளது. தற்போது மேற்கண்ட வார்டுகளில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையமானது ஒரு வருட காலம் கடந்து விட்ட நிலையில் தற்போது சுத்திகரிப்பு நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள பழுதடைந்த சாதனங்களை மாற்றியமைக்கவும் ஓராண்டு காலம் பராமரிப்பு பணி செய்யவும் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கவும் பொதுமக்களின் நலன் கருதி 2024–2025 ஓராண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 09.08.2024 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டுள்ளது. கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.7,15,18 ஆகிய பகுதிகளில் குடிநீர் சுத்திகரிப் நிலையம் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 9.00 | திருவாளர் எச்.கே.கன்ஸ்டிரக்ஷன்ஸ் | மதிப்பீடு தொகையை விட 0.16% அதிகம் |
| | | | திருவாளர் கென்ஸ் டெக்னாலஜி எல்.எல்.பி | மதிப்பீடு தொகையை விட 0.09% குறைவு |

அலுவலக குறிப்பு :– மேற்படி பணியின் அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**<u>பொருள் எண்: 21</u>**

மாங்காடு நகராட்சியில் 2024–2025ஆம் ஆண்டு பொது நிதி மற்றும் குடிநீர் நிதியின் கீழ் பின்வரும் இனங்களுக்கு 09.08.2024 அன்று ஆண்டு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டுள்ளது. கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.1 முதல் 14 வரை உள்ள வார்டுகளில் குடிநீர் பராமரிப்பு பணிக்கு தேவையான உதிரிபொருட்கள் சப்ளை செய்தல் மற்றும் மின் மோட்டார் பழுதுபார்க்கும் பணி மேற்கொள்ளுதல் | 9.00 | திருவாளர் கென்ஸ் டெக்னாலஜி எல்.எல்.பி | மதிப்பீடு தொகையை விட 0.09% குறைவு |
| | | | திருவாளர் எச்.கே.கன்ஸ்டிரக்ஷன்ஸ் | மதிப்பீடு தொகையை விட 0.39% அதிகம் |
| 2 | வார்டு எண்.15 முதல் 27 வரை உள்ள வார்டுகளில் குடிநீர் பராமரிப்பு பணிக்கு தேவையான உதிரிபொருட்கள் சப்ளை செய்தல் மற்றும் மின் மோட்டார் பழுதுபார்க்கும் பணி மேற்கொள்ளுதல் | 9.00 | திருவாளர் கென்ஸ் டெக்னாலஜி எல்.எல்.பி | மதிப்பீடு தொகையை விட 0.09% குறைவு |
| | | | திருவாளர் எச்.கே.கன்ஸ்டிரக்ஷன்ஸ் | மதிப்பீடு தொகையை விட 0.39% அதிகம் |

அலுவலக குறிப்பு :– மேற்படி பணியின் அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**<u>பொருள் எண்: 22</u>**

மாங்காடு நகராட்சியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தில் காலை உணவு சப்பளை செய்யும் பணியை M/S.NO FOOD WASTE நிறுவனத்திற்கு 18.05.2023 முதல் பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டு வருகிறது. அதற்கான ஒப்பந்த பணிக்காலம் 18.05.2024ல் முடிவடைந்த நிலையில் தற்போது 2024 நாடாளுமன்ற தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளதால் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத நிலை உள்ளது.இதனால் அரசு பள்ளிகளில்1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் பணியில் தொய்வு ஏற்படும் என்பதால் மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி அப்பணியை மேற்கொள்ளும் M/S.NO FOOD WASTE நிறுவனத்திற்கு ஜூன்2024 முதல் நவம்பர் 2024 வரையிலான ஆறு மாதங்களுக்கு ஒப்பந்தத்தினை அதே விலை விகிதத்தில் (ரூ.12.60/- ஒரு குழந்தைக்கு) நீட்டிப்பு செய்தது மற்றும் அதற்கான செலவினம் ரூ.9,49,536/-க்கு மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

அலுவலக குறிப்பு-

1. மேற்கண்ட செலவினம் ரூ.9,49,536/-க்குமேற்கொண்டதற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்..
2. பணி நீட்டிப்பு செய்ததை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண்: 23</u>**

மாங்காடு நகராட்சிக்கு சொந்தமான காமாட்சி அம்மன் கோயில் பின்புறம் உள்ள நகராட்சி நவீன குளியலறை மற்றும் கட்டண கழிப்பிடம் ஏலம் ஒப்பந்தப்புள்ளி கோரி மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் மற்றும் ஏதேனும் ஒரு நாளிதழில் விளம்பரம் செய்யுமாறு கோரப்பட்டது. மேற்படி விளம்பரம் ஜூலை–2024 தினத்தந்தி நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. Adwave Advertising Pvt Ltdக்கு விளம்பர கட்டணம் ரூ.48460/– வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு–</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண்: 24</u>**

மாங்காடு நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வரும் Canon Printer பழுதடைந்து இருப்பதால் அலுவலக ஆவணங்களை நகல் எடுக்கவும், பிரிண்ட் எடுக்கவும் சிரமமாக உள்ளதால் அதனை உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெற்று பழுதுநீக்கம் செய்யவும், அதற்கான தோராய செலவினம் ரூ.60,000/– ஐ பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு–</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்: 25**

மாங்காடு நகராட்சியின் பொறியாளர் அலுவலக பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டு வரும் ஈப்பு வாகனம் எண்.TN 85U 9200, 8227 கி.மீ.மேல் கடந்து விட்டதால் அங்கீகரிக்கப்பட்ட Automotive Manufacutre Pvt., Ltd., என்ற நிறுவனத்தில் இரண்டாவது பழுதுநீக்கம் செய்யப்பட்டமைக்கான நிறுவனத்தின் பட்டியல் தொகை ரூ.8829/−(inclusive GST)-ஐ நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழங்கியது மன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு−**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்: 26**

மாங்காடு நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டு வரும் கணினிகள் பிரிண்டர்களை பராமரிப்பு பணி செய்ய ஆண்டு ஒப்பந்தம் முடிவடைந்துள்ள நிலையில் மேற்படி உபகரணங்களை ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் பராமரிப்பு பணிகள் செய்யவும், அதற்கான தோராய செலவினம் ரூ.3.00லட்சம் 2024−2025ஆம் ஆண்டின் பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்: 27**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் 40 உயர்கோபுர மின் விளக்குகள் நிறுவப்பட்டுள்ளன. இவற்றில் தற்போது, 37 உயர்கோபுர மின் விளக்குகளில் பெரும்பாலான மின்விளக்குகள் பழுதாகி எரியாததால் பொதுமக்கள் நலன் கருதி இவற்றை பழுதுநீக்கம் செய்ய 09.08.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பின்வரும் ஒப்பந்தாரர்களிடமிருந்நுது ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | மாங்காடு நகராட்சியில் மாரியம்மன் கோயில் அருகில், எஸ்.எஸ்.கோயில் தெரு, திருக்குளம் அருகில், மேலாண்டை மாட வீதி மற்றும் பாலாண்டீஸ்வரர் கோயில் தெரு ஆகிய இடங்களில் உள்ள உயர் கோபுர மின்விளக்குகள் பராமரித்தல் பணி | 5.00 | திருவாளர் லட்சுமி எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 0.52% குறைவு |
| | | | திருவாளர் ராதிகா எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 0.92% அதிகம் |

அலுவலக குறிப்பு :– மேற்படி பணியின் அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்: 28**

மாங்காடு நகராட்சியில் பின்வரும் பணிகளை 2024-2025ஆம் ஆண்டு பொது நிதியில் மேற்கொள்ள மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2024-25ம் ஆண்டின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1 | கிருபாணந்தவாரியார் மெயின் தெருவில் தார்சாலை அமைத்தல் | 15.25 |
| 2 | கிருபாணந்தவாரியார் 1வது குறுக்கு தெரு முதல் 4வது குறுக்கு தெரு வரை தார்சாலை அமைத்தல் | 15.10 |
| 3 | திருமுருகன் நகர் தார்சாலை அமைத்தல் | 17.50 |
| 4 | திருமுருகன் நகர் 1வது தெரு தார்சாலை அமைத்தல் | 15.00 |
| 5 | ஜனனி நகர் மெயின் ரோடு மற்றும் 1வது மெயின் ரோடு, 2வது மெயின் ரோடு தார்சாலை அமைத்தல் | 18.25 |
| 6 | ஜனனி நகர் 1 முதல் 5வது குறுக்கு தெரு தார்சாலை அமைத்தல் | 14.55 |
| 7 | சையத் சாதிக் நகர் கப்பி சாலை அமைத்தல் | 1.50 |
| 8 | செந்தமிழ்நகர் பகுதியில் மழைநீர் கால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 2.50 |
| 9 | மேல் இரகுநாதபுரம் அங்கன்வாடி சுற்றுசுவர் மற்றும் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 12.25 |
| 10 | திருமாநகர் மெயின் தெருவில் தார்சாலை அமைத்தல் | 12.25 |
| 11 | திருமாநகர் 1 முதல் 4வது குறுக்கு தெரு வரை பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 4.10 |
| 12 | காயிதேமில்லத் நகர் குறுக்கு தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 4.50 |
| 13 | பட்டூர் வாலாஜா தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 19.80 |
| 14 | பட்டூர் வாலாஜா தெரு முதல் தந்தி இணைப்பு கால்வாய் வரை வடிகால்வாய் அமைத்தல் | 19.80 |
| 15 | பட்டூர் வாலாஜா தெருவில் சிறு பாலம் மற்றும் சாந்தி நகர் குறுக்கு தெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 6.80 |
| 16 | ஸ்ரீனிவாசா நகர் (ஸ்டெப் ஸ்டோன் பார்ம்ஸ்) மெயின் தெரு மற்றும் 1வது குறுக்கு தெருவிற்கு மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் | 11.50 |
| 17 | ஸ்ரீனிவாசா நகர் (ஸ்டெப் ஸ்டோன் பார்ம்ஸ்) 2வது. 3வது, 4வது 5வது குறுக்கு தெருக்களுக்கு மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் | 11.20 |
| 18 | பாலாஜி அம்பாள் நகர் 10வது குறுக்கு தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் | 1.60 |

| | | |
|---|---|---|
| 19 | ஹரி அவென்யூ முதல்வரின் காலை உணவு திட்டம் சமையற்கூடம் பகுதியில் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 2.00 |
| 20 | வசந்தபுரம் மாருதி என்கிளேவ் பூங்காவில் பராமரிப்பு பணி மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் | 3.90 |
| 21 | ஓம் சக்தி நகர் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் சீரமைத்தல் | 9.60 |
| 22 | ஹரி அவென்யூ மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி வளாகத்தில் சுற்றுசுவர் அமைத்தல் | 16.15 |
| 23 | பெருமாள் கோயில் தெரு மழைநீர் வடிகால்வாய் சீரமைத்தல் | 9.70 |
| 24 | இரகுநாதபுரம் அரசு பள்ளி கட்டிடம் மற்றும் கழிப்பறைகள் கட்டிடம் சீரமைத்தல் | 9.00 |
| 25 | பத்திரிமேடு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி வளாகத்தில் சுற்றுசுவர் அமைத்தல் | 5.00 |
| 26 | பாலாஜி அவென்யூ 10வது குறுக்குத்தெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 1.60 |
| 27 | லட்சுமி அவென்யூ, அஸ்டலட்சுமி நகர் அனெக்ஸ், மல்லிகா நகர் பகுதிகளில் புதிய பைப்லைன் அமைத்தல் | 2.00 |
| 28 | முத்துசாமி அவென்யூ மின் மோட்டார் உடன் கூடிய குடிநீர் தொட்டி அமைத்தல் | 5.10 |
| 29 | கொல்லை காலனி தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் | 11.00 |
| 30 | மல்லிகா நகர் தார்சாலை அமைத்தல் | 6.85 |
| 31 | அம்மன் முருகன் நகர், ஈஸ்வரன் நகர், காந்தி நகர், ஹரி வென்யூ வழியாக பொது பணி துறைக்கு சொந்தமான துறைக்கு சொந்தமான கால்வாயுடன் இணைத்தல் (வெள்ளீஸ்வரன் கோயில் பின்புறம்) | 19.80 |
| 32 | பத்மாவதி நகர் 2வது மெயின் ரோடு தார்சாலை அமைத்தல் | 14.50 |
| 33 | சி.எஸ்.ஐ.பள்ளி குறுக்கு தெரு சிறுபாலம் அமைத்தல் | 0.80 |

**<u>அலுவலகக்குறிப்பு</u>:** மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2024-25ம் ஆண்டு பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

**<u>பொருள் எண்: 29</u>**

மாங்காடு நகராட்சியில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துகள் துறை இயக்குநர் அவர்களின் கடிதத்தில் ஜூன் 2024 முதல் 15 நாட்களில் 44 குடிநீர் மாதிரிகள் எடுத்து பரிசோதிக்கப்பட்டதில் அதில் 4 இடங்களில் எடுக்கப்பட்ட குடிநீர் மாதிரிகள் நுண்ணுயிர் பாதிப்பு உள்ளதாகவும், குளோரின் கலந்து கிருமி நீக்கம் செய்த பின்னரே பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மங்களபுரம், அடிசன் நகர், வசந்தபுரம் மற்றும் திருப்பதி நகர் ஆகிய இடங்களில் பொருத்தப்பட்டுள்ள ஆழ்துளை கிணற்று நீரை நேரடியாக வழங்காமல் HDPE டேங்கில் நிரப்பி, குளோரின் மூலம் கிருமிநீக்கம் செய்த அதன் பிறகு பொதுமக்களுக்கு விநியோகிக்களாம். மேற்கண்ட பணி மேற்கொள்ள நான்கு இடங்களில் 1000லிட்டர் கொள்ளளவு கொண்ட HDPE டேங்க் குளோரினேஷன் யூனிட் மற்றும பிளாட்பாரம் அமைக்கவும் ஒரு இடத்திற்கு

ரூ.3.00லட்சம் வீதம் 4 இடங்களுக்கு ரூ.12.00லட்சம் நகராட்சியின் குடிநீர் நிதி 2024–2025ன் கீழ்மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்: 30**

மாங்காடு பட்டூர் குளத்தை சுற்றிலும் பொதுமக்கள் நடைப்பயிற்சி மேற்கொள்வதற்காக பேவர் பிளாக் சாலை அமைக்கப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது. நகர்மன்றத் துணைத்தலைவர் அவர்கள் 10.07.2024ம் தேதிய கடிதத்தில் வன்னியர்பட்டு பகுதியில் வசிக்கின்ற பொதுமக்கள் பயன்பெறும் வகையில் காரிய மேடை அமைத்து கொடுக்க கோரியுள்ளார். அதனை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** –

1) பட்டூர் குளத்தின் அருகே காரியமேடை அமைக்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2) மேற்கண்ட குளத்தை சுற்றிலும் அமைக்கப்பட்ட பேவர் பிளாக் சாலையில் பொதுமக்கள் தினசரி நடைபயிற்சி மேற்கொள்ளும் போது குளக்கரையில் காரிய மேடை அமைத்தால் பொதுமக்களுக்கு இடையூராக இருக்கும் என்பதால் குளத்தின் சுற்றுசுவர் பகுதிக்கு வெளியே காரியமேடை அமைக்க மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.31**

இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான Advanced Technology கொண்ட 7 எண்ணிக்கை கணிணிகளை பிரிண்டர்கள் Gem Rateன் அடிப்படையில் வாங்கிக்கொள்ள நகர்மன்றத் தீர்மானம் எண். 550 நாள்.24.06.2024ல் அனுமதித்ததின்படி, தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து இணையதளம் வாயிலாக 25.07.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் கீழ்க்கண்டவாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விவரம் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப் புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | HP all in one desktop PCI5 12th Gen 8 GB ram 51, 2 GB SSD wireless Keyboard, Mouse Wifi 60.5m FHD | M/s. துக்காராம் கம்ப்யூட்டர்ஸ், பூவிருந்தவல்லி | 15.78% குறைவு |
| | | M/s. துளசி எண்டர்பிரைசஸ். சக்தி நகர், கரையாண்சாவடி | 15.63% அதிகம் |

அ.கு.- மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும், 2024-2025ம் நிதியாண்டின் பொதுநிதியின்கீழ் செலவினம் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்: 32**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பின்வரும் குடிநீர் பணிகள் நகர்மன்ற உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டுள்ளவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு அனுமதியும் அதற்கான செலவினத்திற்கு ஒப்புதல் வேண்டியும் மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.1 மற்றும் பைப் லைன் விஸ்தரிப்பு பணிகள் செய்தல் | 7.00 |
| 2 | மாங்காடு நகராட்சி பகுதியில் உள்ள பைபம்புகள் பழுதுநீக்கம் செய்தல் | 2.00 |
| 3 | வார்டு எண்.12ல் ஆழ்துளை கிணறு அமைத்து தண்ணீர் தொட்டி அமைத்தல் | 5.10 |
| 4 | வார்டு எண்.16ல் ஆழ்துளை கிணறு அமைத்து தண்ணீர் தொட்டி அமைத்தல் | 5.10 |
| 5 | வார்டு எண்.16ல் ஆழ்துளை கிணறு அமைத்து தண்ணீர் தொட்டி அமைத்தல் | 5.10 |
| 6 | வார்டு எண்.12ல் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் ஆழ்துளை கிணறு அமைத்தல் | 14.00 |
| 7 | வார்டு எண்.16ல் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் ஆழ்துளை கிணறு அமைத்தல் | 14.00 |
| 8 | வார்டு எண்.15 அங்கன்வாடியில் ஆழ்துளை கிணறு அமைத்தல் | 2.00 |

<u>அலுவலகக் குறிப்பு</u> : 1) மேற்கண்ட பணிகளை அனுமதிக்கலாம்.
2) இதற்கான செலவினத்தை 2024-25ம் ஆண்டு நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

## பொருள் எண்.33

மாங்காடு நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு தேவையான நோட்புக், கவர், பைல்பேட், மூடுதாள், ஸ்டாப்ளர் உள்ளிட்ட எழுதுபொருட்கள் 2024-2025ம் ஆண்டிற்கு அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு சொசைட்டியில் வாங்கிக்கொள்ள நகர்மன்றத் தீர்மானம் எண்.554 நாள்.24.06.2024ல் அனுமதித்ததின்படி, அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு சொசைட்டி நிறுவனங்களிடமிருந்து 25.07.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் கீழ்க்கண்டவாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விவரம் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப் புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு அலுவலகத்திற்கு தேவையான நோட்புக், கவர், பைல்பேட், மூடுதாள், ஸ்டாப்ளர் உள்ளிட்ட எழுதுபொருட்கள் சப்ளை செய்தல் | M/s. The Chennai Printing and Stationery Workers' Industrial Co-op Society Ltd. Kondethopp, Chennai | குறைவு |
| | | M/s. Sangu Nagar Stationery Printing and Registers Manufacturing Indl. Co.op Society Ltd, Chennai | அதிகம் |

அ.கு.- மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி, நகர்மன்றத் தலைவர்

அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும், 2024-2025ம் ஆண்டு பொதுநிதியின்கீழ் செலவினம் மேற்கொண்டமைக்கும் அனுமதி வழங்கலாம்.

## பொருள் எண்.34

மாங்காடு நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு தேவையான தீர்மானப்புத்தகம், பதிவேடுகள், புத்தகங்கள் மற்றும் படிவங்கள் 2024-2025ம் ஆண்டிற்கு அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு சொசைட்டியில் வாங்கிக்கொள்ள நகர்மன்றத் தீர்மானம் எண்.551 நாள்.24.06.2024ல் அனுமதித்ததின்படி, அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு சொசைட்டி நிறுவனங்களிடமிருந்து 25.07.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் கீழ்க்கண்டவாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விவரம் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப் புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு தேவையான தீர்மானப்புத்தகம், பதிவேடுகள், புத்தகங்கள் மற்றும் படிவங்கள் 2024-2025ம் ஆண்டிற்கு சப்ளை செய்தல் | M/s. The Chennai Printing and Stationery Workers' Industrial Co-op Society Ltd. Kondethopp, Chennai | குறைவு |
| | | M/s. Sangu Nagar Stationery Printing and Registers Manufacturing Indl. Co.op Society Ltd, Chennai | அதிகம் |

அ.கு.- மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி, நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும், 2024-2025ம் ஆண்டு பொதுநிதியின்கீழ் செலவினம் மேற்கொண்டமைக்கும் அனுமதி வழங்கலாம்.

## பொருள் எண்.35

இந்நகராட்சியின் 2022-2023ம் ஆண்டு தணிக்கை அறிக்கை தயார் செய்ததில், தட்டச்சு செய்து பிரிண்டிங் மற்றும் பைண்டிங் பணி செய்ததற்கான செலவினம் ரூ.15000-ஐ எஸ்.கே.எஸ் ஐடி சொலுயுசன்ஸ் என்ற நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அ.கு.- 1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). மன்ற முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் எண்.36

இந்நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு தேவையான 7 எண்ணிக்கை பிரிண்டர்களை Gem Rateன் அடிப்படையில் வாங்கிக்கொள்ள நகர்மன்றத் தீர்மானம் எண்.553 நாள்.24.06.2024ல் அனுமதித்ததின்படி, தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து இணையதளம் வாயிலாக 25.07.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் கீழ்க்கண்டவாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விவரம் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப் புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | HP Laserjet all in one printer (A4 black and white) laserjet printer- print, copy, scan upto 42/40ppm LTr/A4 ethernet USB etc., | M/s. துக்காராம் கம்ப்யூட்டர்ஸ், பூவிருந்தவல்லி | 15.30% குறைவு |
| | | M/s. துளசி எண்டர்பிரைசஸ். சக்தி நகர், கரையாண்சாவடி | 14.74% அதிகம் |

அ.கு.- மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும், 2024-2025ம் நிதியாண்டின் பொதுநிதியின்கீழ் செலவினம் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.37**

மாங்காடு நகராட்சி பகுதியில் உள்ள நூலக கட்டிடம் கடுமையாக சேதமடைந்துள்ளது. அதனை கட்ட அரசுக்கு கருத்துரு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. புதிய நூலக கட்டிடம் கட்டும் வரை சிவானந்தா நகர் பூங்காவில் உள்ள கட்டிடத்தை ரூ.3.50லட்சம் தோராய மதிப்பீட்டில் மறு சீரமைப்பு செய்து மேற்படி கட்டிடத்தில் தற்காலிகமாக நூலகத்தினை மாற்றவும் அதற்கான செலவினத்தை 2024-2025ஆம் ஆண்டு பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு –
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி கட்டிடம் சீரமைப்பதற்கான செலவினம் ரூ.**3.50**லட்சத்தினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.38**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2ல் அமைந்துள்ள நைனார் குளம் கரையை சுற்றி சிமெண்ட் கற்கள் பதித்தல் மற்றும் சுத்தம் செய்தல் பணி மேற்கொள்ள மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2024-25ம் ஆண்டின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.2ல் அமைந்துள்ள நைனார் குளம் கரையை சுற்றி சிமெண்ட் கற்கள் பதித்தல் மற்றும் சுத்தம் செய்தல் பணி | 28.00 |

<u>அலுவலகக்குறிப்பு:</u> மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2024-25ம் ஆண்டு பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.39**

மாங்காடு நகராட்சியில் 2023-2024ஆம் ஆண்டில் மழைக்காலங்களில் பாதிப்படைந்த பகுதிகளில் பொது மக்களுக்கு பின்வரும் விவரப்படியான அத்தியாவசிய பணிகள் பிரிவு 57(7)ன் கீழ் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டு 2023-2024ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் பட்டியல் தொகை வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும் பின்னேற்பு ஒப்புதலுக்கும்.

| வ.எண். | வேலையின் பெயர் | பட்டியல் தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மிக்ஜாம் புயலால் மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட தேங்கி நிற்கும் மழைநீரால் குடியிருப்பு பகுதி பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு தேவையான உணவு தயார் செய்யும் பணி | 5.90 |
| 2 | மாங்காடு நகராட்சிக்கு வெள்ள நிவாரண பொருட்கள் உப்பு, அரிசி, துவரம்பருப்பு, ரவை மற்றும் சக்கரை ஆகிய பொருட்கள் சப்ளை செய்தது | 3.60 |
| 3 | மிக்ஜாம் புயலால் மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட தாழ்வான பகுதிகளில் தேங்கி நிற்கும் மழைநீரை வெளியேற்ற ஹோஸ் மற்றும் இதர பொருட்கள் சப்ளை செய்யும் பணி | 5.10 |
| 4 | மிக்ஜாம் புயலால் மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட தாழ்வான பகுதிகளில் தேங்கி நிற்கும் மழைநீரை வெளியேற்ற 50HP மின் மோட்டார் மற்றும உதிரி பாகங்கள் சப்ளை செய்யும் பணி | 9.90 |
| 5 | மிக்ஜாம் புயலால் மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட தாழ்வான பகுதிகளில் தேங்கி நிற்கும் மழைநீரை வெளியேற்ற 2HP மின் மோட்டார் மற்றும உதிரி பாகங்கள் சப்ளை செய்யும் பணி | 9.90 |
| 6 | மிக்ஜாம் புயலால் மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட தாழ்வான பகுதிகளில் தேங்கி நிற்கும் மழைநீரை வெளியேற்ற ஆயில் எஞ்ஜின் சப்ளை செய்யும் பணி | 6.00 |
| 7 | மிக்ஜாம் புயலால் மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மின் துண்டிப்பு ஏற்பட்டதால் மின் தடையின்றி மக்களுக்கு பணிகள் தொடர்ந்து செய்து முடிக்க வாடகை அடிப்படையில் ஜெனரேட்டர்கள் அமைக்கும் பணி | 4.41 |
| 8 | மிக்ஜாம் புயலால் மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட தாழ்வான பகுதிகளில் தேங்கி நிற்கும் மழைநீரை வெளியேற்ற 7.50HP மின் மோட்டார் மற்றும 4HP திறன் கொண்ட ஆயில் எஞ்ஜின் அதற்கான உதிரி பாகங்கள் கொள்முதல் செய்யும் பணி | 2.45 |
| 9 | மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட தாழ்வான பகுதியான வசந்தபுரம் மெயின் ரோடு மற்றும் செல்வகணபதி | 4.60 |

| | | |
|---|---|---|
| | நகர் சாலை கப்பி தளம் அமைத்தல் | |

<u>அலுவலகக்குறிப்பு:</u> 1) மன்ற அனுமதி வழங்கலாம்.

2) நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டு பட்டியல் தொகை 2023-2024ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண்.40

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் உள்ள தெரு விளக்குகளை LED விளக்குகளாக மாற்றியமைக்க பொது நிதியின் கீழ் ரூ331.72 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ள 14.10.2022ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேற்கண்ட பணிக்கு திருவாளர்.குமரன் இண்டஸ்ட்ரீஸ் என்பவர் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ளதால், அந்த நிறுவனத்திற்கு 22.02.23 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டது மேற்கண்ட நிறுவனம் மூலம் 40 வாட்ஸ் LED-815, 60 வாட்ஸ் LED -929 , 90வாட்ஸ் LED -530 ஆக மொத்தம் 2274 எண்ணிக்கையிலான LED விளக்குகள் பொருத்தப்பட்டன. தற்போது நகர் மன்றத்தலைவர் அவர்கள் 16.08.2024 அன்று அளித்துள்ள கடிதத்தின்படி மேற்கண்ட ஒப்பந்ததாரர். திருவாளர். குமரன் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் வழங்கிய LED விளக்குகள் தரமற்று இருப்பதாகவும் , பழுதடைந்த LED விளக்குகளை மாற்றி பொருத்தினால் ஓரிரு நாட்களில் மீண்டும் புதிய LED பிட்டிங்குகளும் பழுதடைந்து விடுவதாகவும், பொதுமக்கள் நேரடியாக பலமுறை தன்னிடமும், அனைத்து வார்டு நகர்மன்ற உறுப்பினர்களிடமிருந்தும் புகார் தெரிவித்தவாறு உள்ளனர் என்றும், அதனால் மேற்கண்ட நிறுவனத்தாரின் ஒப்பந்தத்தை ரத்து செய்யவேண்டும் என தீர்மானம் இயற்ற தெரிவித்துள்ளார். மேலும், பராமரிப்பு காலத்தில் அடிக்கடி பிட்டிங்குகள் மாற்றி பொருத்த ஒப்பந்ததாரர் திருவாளர்.குமரன் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் பொறுப்பேற்று அவர்களின் பணியாட்களை கொண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளவேண்டும். ஆனால், அந்நிறுவனம் இதுவரை அதற்கும் பொறுப்பு ஏற்கவில்லை. தொடர்ந்து புகார் வந்த வண்ணம் உள்ளதால் அரசுக்கும் நகர் மன்றத்திற்கும் அவப்பெயர் ஏற்படுவதால், இவரது ஒப்பந்தத்தை கட்டாயமாக ரத்து செய்யவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். இதனை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மேற்கண்ட ஒப்பந்ததாரர் திருவாளர்.குமரன் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தார் வழங்கிய LED விளக்குகள் மூன்றாம் நபர் தரச்சான்று பெற்ற பிறகே பொருத்தப்படுகிறது. Warranty period 1வது மற்றும் 2 வது வருடத்தில் இது போன்ற எரியாத விளக்குகளை புதியதாக மாற்றி பொருத்த ஒப்பந்தத்தில் வழிவகை உள்ளது. இதனை மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

பொருள் எண்.41

மாங்காடு நகராட்சி எல்லைக்குள் வரும் வாகனங்களுக்கு நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமை வழங்கி தற்போது ஓராண்டு காலம் முடிவுற்றதால், 2024-2025ஆம் ஆண்டிற்கு குத்தகை தொகையானது கீழ்க்கண்டுள்ள விவரப்படி முதலாம் ஆண்டு

**குத்தகை தொகையில் 5% உயர்வு செய்த குத்தகை தொகை மற்றும் அதனுடன் சரக்கு (ம) சேவைவரி 18% மற்றும் வருமானவரி 2% உடன் சேர்த்து ஏற்கனவே 2023-2024ம் ஆண்டில் குத்தகை உரிமம் எடுத்த குத்தகைதாரர் திரு.அ.மணிகண்டன் த/பெ.ச.அண்ணாமலை மாங்காடு என்பவரிடமிருந்து வசூலிக்க மன்றப்பொருள் மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது,**

| **குத்தகை உரிமை பெற்ற இனம்** | **மாங்காடு நகராட்சி எல்லைக்குள் வரும் இலகுரக வாகனங்களுக்கு நுழைவுக் கட்டணம் வசூல் செய்தல்** |
|---|---|
| 2023-2024ம் நிதியாண்டில் ஏலத்தொகை | ரூ.10,03,500/- |
| **<u>கூட்டுக</u>** | |
| ஏலத்தொகையில் 5% சேர்த்து | ரூ.10,53,675/- |
| சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ.1,89,662/- |
| வருமானவரி 2 % | ரூ.21,074/- |
| 2024-2025ம் ஆண்டிற்கு செலுத்த வேண்டிய குத்தகை தொகை | ரூ.12,64,411/- |

அ.கு- மன்றம் அனுமதி வழங்கலாம்.